# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:155** **தேதி:-10.03.2017**

**போபாலில் அகில இந்திய BSNL உழைக்கும் மகளிர் கருத்தரங்கம் மற்றும் இரு செய்திகள்**

அன்பார்ந்த தோழர்களே,

அகில இந்திய அளவில் BSNL உழைக்கும் மகளிர் ஒருங்கிணைப்புக் குழுவை உருவாக்குவதென 13.02.2017 அன்று கூடிய BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய மையக் கூட்டம் முடிவு செய்துள்ளது. அந்த அமைப்பை உருவாக்குவதற்கென 14.05.2017 அன்று போபாலில் ஒரு நாள் கருத்தரங்கம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. 14.05.2017 அன்று காலை 10 மணிக்கு துவங்க உள்ள இந்த கருத்தரங்கத்தினை CITU சங்கத்தின் அகில இந்திய தலைவர் தோழர் K.ஹேமலதா துவக்கி வைக்க உள்ளார். ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் 5 தோழர்களுக்கும் குறையாமல் பங்கேற்க வேண்டும் என வழி காட்டி உள்ள மத்திய சங்கம் அதில் குறைந்த பட்சம் ஒரு பெண் ஒப்பந்த தொழிலாளரையாவது பங்கேற்கச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

நமது மாவட்ட சங்கங்கள் இந்த கருத்தரங்கத்தில் கலந்துக் கொள்ள இருக்கும் தோழர்களின் பெயர்களை 13.03.2017 அன்று மாலைக்குள் தமிழ் மாநில BSNL உழைக்கும் மகளிர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் தோழர் P. இந்திரா அவர்களிடம் வழங்கிட வேண்டும் என மாநில சங்கத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம். பெண்களாக செல்ல இருப்பதால் ரயில் முன்பதிவு உட்பட அவர்களுக்கென்ற தனித்த ஏற்பாடுகளை செய்ய வேண்டி உள்ளதை கனக்கில் கொண்டு மாவட்ட சங்கங்கள் இதில் கூடுதல் கவனம் எடுத்து தகவலை தெரிவிக்க வேண்டுகிறோம்.

**நேரடி நியமன JEக்களுக்கு அனைத்து தடைகளும் நீங்கியது:-** நேரடி நியமன JE தேர்வில் தோல்வியுற்ற விண்ணப்பதாரர்கள் சிலர் டெல்லி நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு 09.03.2017 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த தேர்வை நீதிமன்றம் சரி என்று தீர்ப்பளித்துள்ளது. எனவே சான்றிதழ் சரிபார்ப்பு முடிந்தவுடன் அவர்கள் பயிற்சிக்கு செல்ல உள்ளனர். வெற்றி பெற்றுள்ள தோழர்களுக்கு BSNL ஊழியர் சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

**BSNL-MTNL இணைப்பு:-** MTNLன் நஷ்டம் தொடர்கிறது. எனினும், பங்கு சந்தையில் அதன் மதிப்பு திடீரென ஒரே நாளில் 16% உயர்ந்தது. அதன் காரணமாக MTNLன் சந்தை மதிப்பு 221 கோடி ரூபாய்கள் உயர்ந்துள்ளது. இதற்கு என்ன காரணம்? BSNL-MTNL நிறுவனங்கள் இணைப்பதற்கான பேச்சு வார்த்தை உயர் மட்ட அளவில் நடைபெறுவதாக வந்த பத்திரிக்கை செய்திகள் தான் காரணம்.

இது தொடர்பாக தோழர் P.அபிமன்யு, GS BSNLEU மற்றும் தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS BSNLEU ஆகியோர் 09.03.2017 அன்று டெலிகாம் கமிஷனின் MEMBER (SERVICES) திரு R.K. மிஷ்ரா அவர்களை சந்தித்து வினவினர். இத்தகைய பேச்சு வார்த்தை எதுவும் நடைபெறவில்லை என அவர் மறுத்துள்ளார். BSNL-MTNL இணைப்பதற்கு முன் தங்களின் கோரிக்கைகளை முழுமையாக ஏற்கப்படா விட்டால் BSNLல் உள்ள ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் சங்கங்கள் இணைப்பை கடுமையாக எதிர்க்கும் என்பதை அவரிடம் தலைவர்கள் தெளிவாக எடுத்துரைத்து உள்ளனர்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**